# வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

2020 இறுதி ஆண்டு மதிப்பீடு

அக்டோபர் 2021

© Verité Research

## *உள்ளடக்க அட்டவணை*


வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால் ..... 3

இது எப்படி செயல்படுகிறது? ..... 3

**1.** அமைச்சரவை முடிவுகள் ..... 5

1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் ..... 5

1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை ..... 6

**2.** செலவின அமைச்சரவைத் தீர்மானங்கள்/ முன்மொழிவுகள் ..... 8

2.1. முன்னேற்றக் கண்காணிப்பான் ..... 8

**3.** கொள்கை அமைச்சரவைத் தீர்மானங்கள் ..... 9

3.1. முன்னேற்றக் கண்காணிப்பான் ..... 10

**4.** முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள். ..... 11

## வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

**"வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்"** என்பது publicfinance.lk தளத்தின் கீழுள்ள ஒரு டாஷ்போர்டு ஆகும். இது வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் செயல்திறனைக் கண்காணிக்கிறது.

2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த டாஷ்போர்டு, அரசாங்கம் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் முன்வைக்கும் வாக்குறுதிகள் குறித்த இரண்டு அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முனைகிறது:

- அரசாங்கம் சொல்வதைச் செய்கிறதா?
- அரசாங்கம் செய்வதைச் சொல்கிறதா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பகிரங்கமாக வழங்குவதன் மூலம் டாஷ்போர்டு கீழுள்ளவற்றை அடைய முயல்கிறது.

(i) அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்

(ii) இவ்வாக்குறுதிகளுக்கு அரசாங்கத்தைப் பொறுப்பாக்குதல்

## இது எப்படி செயல்படுகிறது?

2020 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரை இல்லாத காரணத்தால் டாஷ்போர்டு 24 அமைச்சரவைத் தீர்மானங்களைக் கண்காணித்தது. ஜனவரி முதல் ஜுன் 2020 வரையான செலவின மற்றும் ஒழுங்குமுறை கொள்கைத் தீர்மானங்கள் இதில் அடங்கும். கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான நிறுவனத்தை அடையாளம் காண்பதற்கான திறன் மற்றும் கண்காணிக்கக்கூடிய விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் கண்காணிப்பதற்கான தீர்மானங்கள் தெரிவுசெய்யப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் முன்னேற்றம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டது. ஆகவே 2019 வரவு செலவுத்திட்ட உரையிலிருந்து 8 முன்மொழிவுகள் 2020 ஆம் ஆண்டில் அவற்றின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டன.

பின்வருவனவற்றை இந்தத் தளம் கண்காணித்தது:

| ஆண்டு | தெரிவுசெய்யப்பட்ட செலவின முன்மொழிவுகள் | | | தெரிவுசெய்யப்பட்ட கொள்கை முன்மொழிவுகள் |
|---|---|---|---|---|
| | **தெரிவுசெய்வதற்கான அளவுகோல்*** | **முன்மொழிவுகளின் எண்ணிக்கை** | **திட்டங்களின் மொத்த மதிப்பு** | **முன்மொழிவுகளின் எண்ணிக்கை** |
| 2017 | ரூ.1 பில்லியனுக்கு மேற்பட்டது | 37 | ரூ. 116,910 மில்லியன் | 0 |
| 2018 | ரூ.1 பில்லியனுக்கு மேற்பட்டது | 38 | ரூ. 149,350 | 0 |
| 2019 | ரூ.500 மில்லியனுக்கு மேற்பட்டது | 37 | ரூ. 100,875 | 22 |

இந்தத் தளம் வருடத்துக்கு இரண்டு தடவைகள் புதுப்பிக்கப்படும். அத்துடன் ஒவ்வொரு செலவின மற்றும் ஒழுங்குமுறை அமைச்சரவைத் தீர்மானங்கள்/முன்மொழிவுகள் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகிறது: **வெளிப்படைத்தன்மை** மற்றும் **முன்னேற்றம்**. அனைத்து அமைச்சரவைத் தீர்மானங்கள்/முன்மொழிவுகளின் நிலை பகிரங்கமாகப் பொதுவெளியில் கிடைக்கும் தகவல்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் கோரிக்கைகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகிறது.

முதல் ஆறு மாதங்களுக்கான வருட நடுப்பகுதி செயல்திறன் மதிப்பீடு அக்டோபர் மாதத்தில் வெளியிடப்படும். அதேவேளை முழு வருடத்திற்குமான ஆண்டிறுதி செயல்திறன் மதிப்பீடு தொடர்ந்து வரும் வருடத்தின் ஏப்ரல்/மே மாதங்களில் வெளியிடப்படுகிறது. **

*2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்வதற்கான அளவுகோல், திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரையின் அறிக்கையிடும் வடிவம் மாறியதால் தெரிவுசெய்வதற்கான அளவுகோல் முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீடு மற்றும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரை தாமதமானதுடன், 2019 மார்ச் மாதத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே 2019 ஆம் ஆண்டில் ஆண்டிறுதி மதிப்பீடு மாத்திரமே முன்னெடுக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரை இல்லாத காரணத்தால் அந்த ஆண்டிலும் ஆண்டிறுதி மதிப்பீடு மட்டுமே முன்னெடுக்கப்பட்டது.

# 1. *அமைச்சரவை முடிவுகள்*

## 1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்

இச்சுட்டியானது ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதி தொடர்பாகவும் அரசாங்கம் தான் **செய்வது பற்றி எந்தளவு வெளிப்படுத்துகிறது** என்பதைக் கண்காணிக்கிறது. இந்தக் கண்காணிப்பான் ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்படும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையின் நிலையை அளவிடுகிறது. அரசாங்க இணையதளங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை கண்காணிப்பான் பயன்படுத்துகின்றது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அரசாங்க நிறுவனங்களுக்கு விஜயம் செய்தும், முறைசாரா கோரிக்கைகளின் மூலமாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன. எனினும் இந்தத் தகவல் சேகரிக்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளது.

வருட நடுப்பகுதி மதிப்பீடானது அமைச்சரவைத் தீர்மானங்கள்/வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளின் முதல் ஆறு மாதத்திற்கான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையின் அளவை மதிப்பிடுகிறது. ஆண்டிறுதி மதிப்பீடானது முழு வருடத்திற்குமான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட வெளிப்படைத்தன்மையின் அளவை மதிப்பிடுகின்றது.

வெளிப்படைத்தன்மை வகைகள் செலவின மற்றும் கொள்கை அமைச்சரவைத் தீர்மானங்கள்/முன்மொழிவுகளுக்குப் பொதுவானவை.

மதிப்பீட்டின்போது கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படைத்தன்மை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | |
|---|---|
| வெளிப்படை யற்றது | அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றதைப் பற்றித் தீர்மானிப்பதற்குத் தேவையான எவ்வித தகவலும் இல்லை |
| **மட்டுப்படுத்தப்பட்டது** | மதிப்பீட்டின் முழுக்காலத்திற்கும் அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்குப் போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை. |
| **ஒத்துழைக்கப்படாதது** | அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும் மதிப்பிடுவதற்கும் கடும் முயற்சி தேவைப்பட்டது |
| **ஒத்துழைக்கப்பட்டது** | அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான வேண்டுகோள்களுக்கு தகவல்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டன |
| **வெளிப்படையானது** | அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான முழுத் தகவல்களும் கேட்பதற்கு முன்னரே வெளிப்படுத்தப்பட்டிருந்தன |

## 1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை

இது அரச நிறுவனங்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதிகள் தொடர்பான தகவல்களை வெளியிடுவதிலுள்ள வெளிப்படைத்தன்மையை ஒப்பிட்டு தரவரிசையை வழங்குகிறது. ஒவ்வொரு நிறுவனமும் 0 முதல் 4 வரையில் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும். 4 என்பது உயர்ந்தபட்ச வெளிப்படைத்தன்மையைக் குறிக்கிறது. அதன் பின்பு அதிக புள்ளிகளைப் பெற்ற அரச நிறுவனங்கள் முதல் குறைந்த புள்ளிகளைப் பெற்ற நிறுவனங்கள் வரை தரவரிசைப்படுத்தப்படும். இது குறித்த ஆண்டில் அவற்றின் செயல்திறனை வெளிப்படுத்துகிறது.

நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் வரும் ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானத்துக்குமான மதிப்பெண்களின் சராசரியைக் கணக்கிடுவதன் மூலம் அரச நிறுவனத்தின் மொத்தப் புள்ளிகள் கணக்கிடப்படுகின்றன. ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானமும் 0 முதல் 100 வரை மதிப்பெண்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு தனிப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்குமான மதிப்பெண்கள் (1) அமைச்சரவைத் தீர்மானத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் தகவல்களின் பயன்பாட்டுத்தன்மை (2)

தகவல்களைப் பெறுவதிலுள்ள இலகுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரை இல்லாத காரணத்தால் ஒதுக்கீடுகள் தொடர்பில் தகவல்களைப் பெற முடியவில்லை என்பதால் அந்த ஆண்டு நிறுவனங்களின் தரவரிசை எளிதான சராசரி முறையைப் பயன்படுத்திக் கணக்கிடப்பட்டது.

**தகவலின் பயன்பாடு:** கிடைத்த தகவல்கள் முழுமையாக பயன்படுத்தக்கூடியவை, பகுதியளவில் பயன்படுத்தக்கூடியவை அல்லது பயன்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானத்துக்கும் 0, 1, 2, 3 அல்லது 4 என்ற ஆரம்ப மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**தகவல்களைப் பெறுவதிலுள்ள இலகுத்தன்மை:** தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மைக்கு ஏற்ப பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஆரம்ப புள்ளிகள் மாற்றப்படுகின்றன. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கு வழங்கப்படும் அதாவது கேட்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படும் தகவல்களுடன் ஒப்பிடுகையில், தகவல்களைக் கோருவதற்கு முன்னரே அவற்றை ஒன்லைன் மூலம் வழங்கும் தகவல்களுக்கு அதிக புள்ளிகள் வழங்கப்படும்.



## 2. செலவின அமைச்சரவைத் தீர்மானங்கள்/ முன்மொழிவுகள்

### 2.1. முன்னேற்றக் கண்காணிப்பான்

இந்தச் சுட்டியானது **அரசாங்கம் தாம் செய்வதாகச் சொல்வதை எந்தளவுக்குச் செய்கிறது** என்பதைக் கண்காணிக்கிறது. அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதிகளுக்குப் பொறுப்பான நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட காலக்கெடு மற்றும் மைல் கற்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் முன்னேற்ற நிலையை மதிப்பிடுகிறது.

வருட நடுப்பகுதி மதிப்பீட்டின் முன்னேற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | |
|---|---|
| தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை. |
| கைவிடப்பட்டுள்ளது | வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது அல்லது பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் அதன் அமுலாக்கம் கண்காணிக்கப்படும் காலஇடைவெளியில் திட்டமிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| புறக்கணிப்பட்டுள்ளது | வாக்குறுதி அமுல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது, ஆனால் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படவில்லை |
| பின்தங்கியுள்ளது | வாக்குறுதி அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது, ஆனால் திட்டமிடப்பட்ட காலஅட்டவணையுடன் ஒப்பிடும் போது பின்தங்கியுள்ளது. |
| முன்னேறியுள்ளது | வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றதுடன் குறித்த இலக்கை குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் அல்லது அதற்கு முன்னர் |

அடைவதற்கான நிலையில் காணப்படுகின்றது.[1]

ஆண்டிறுதி மதிப்பீட்டின் முன்னேற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | | |
|---|---|---|
| ? | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் நிலையைத் தீர்மானிக்கத் தகவல் கிடைக்கவில்லை அல்லது கிடைத்த தகவல் போதுமானதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லை |
| ✕ | கைவிடப்பட்டுள்ளது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை அல்லது அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதி செயல் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது |
| | முன்னேற்றமற்றது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% க்கும் குறைவாக எட்டப்பட்டுள்ளது |
| | பகுதியளவு நிறைவேறியது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% - 66% க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது |
| | கணிசமான அளவு நிறைவேறியது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 66% - 80% க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது |
| ✓ | முற்றாக நிறைவேறியது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 80%க்கும் அதிகமாக உள்ளது |

## 3. கொள்கை அமைச்சரவைத் தீர்மானங்கள்

2019 ஆம் ஆண்டில் இந்தத் தளம் தனது நோக்கத்தை விரிவுபடுத்தி, வரவு செலவுத்திட்ட உரையில் அரசாங்கம் முன்வைக்கும் கொள்கை உறுதிப்பாடுகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதையும் இணைத்துக்கொண்டது. இந்த அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு செலவின ஒதுக்கீடுகள் கிடையாது.

[1] ஒரு குறிப்பிட்ட வாக்குறுதி ஜூன் 30 2019 அன்றைக்கு இலக்கிடப்பட்ட அடைவின் 90% இனை அடைந்திருக்கும் பட்சத்தில் அவ்வாக்குறுதி முன்னேற்றகரமானது என வகைப்படுத்தப்படுகின்றது

"நிறைவேற்றப்பட்டன" அல்லது "பகுதியளவில் நிறைவேற்றப்பட்டன" எனக் கருதுவதற்கு சட்ட உருவாக்கம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல்கள் (வர்த்தமானி) தேவைப்படுவதன் அடிப்படையில் இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள்/முன்மொழிவுகள் தெரிவுசெய்யப்படுகின்றன. வர்த்தமானி அறிவிப்புகள், அரசாங்க சுற்றறிக்கைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்த அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கைகள், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகள் போன்ற பகிரங்கமாகப் பொதுவெளியில் கிடைக்கும் தகவல்கள் மூலம் இந்தத் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

## 3.1. முன்னேற்றக் கண்காணிப்பான்

அமைச்சரவைத் தீர்மானங்கள்/முன்மொழிவுகளை செயல்படுத்துவதில் அரசாங்கத்தின் முன்னேற்றத்தை இது கண்காணிக்கிறது.

| | | |
|---|---|---|
| ? | **வெளிப்படுத்தப்படவில்லை** | அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவின் நிலையைத் தீர்மானிக்கத் தகவல்கள் கிடைக்கவில்லை அல்லது கிடைத்த தகவல் போதுமானதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லை |
| ✕ | **நிறைவேற்றப்படவில்லை** | அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவின் எந்தவொரு பகுதிக்கும், தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்படவில்லை. இதை சம்பந்தப்பட்ட அமைச்சு/அரச நிறுவனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. |
| ◐ | **பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது** | அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கும் அன்றி ஒரு சில பகுதிகளுக்கு மட்டும், தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளது. |
| ✓ | **நிறைவேற்றப்பட்டுள்ளது** | அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கும் தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளதுடன் மேலதிக எந்த நடவடிக்கையும் தேவையில்லை. |

## 4. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள்.

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| பேரூந்து நிலையங்கள் மற்றும் புகையிரத நிலையங்களில் துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல் | மூடப்பட்டுள்ளது | வெளிப்படுத்தப்படவில்லை | நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சுநகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சு |
| | 2016 ஆம் ஆண்டின், 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக தகவல்களைச் சரிபார்த்தலின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையானது, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடமிருந்து, நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சுக்கு மாற்றப்பட்டது. இருப்பினும் இந் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தம்முடையதல்ல என இராஜாங்க அமைச்சு குறிப்பிட்ட பின்னர் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையானது, அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டது. எவ்வாறாயினும் அமைச்சரவையானது, | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தை இனங்காண முடியாததால் நிகழ்ச்சித திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடக் கூடிய வகையில் எவ்விதமான தகவலையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு வசதி அமைச்சு 12 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 1.67 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த 3 செயல்திட்ட முன்மொழிவுகள், 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | இந் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பைக் குறிப்பிட்ட ஒரு அமைச்சிற்கு வழங்கத் தவறி விட்டது.<br>இதன் விளைவாக முன் மொழியப்பட்ட நிகழ்ச்சித் திட்டமானது, பெருநகர அமைச்சின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் அரசாங்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்ட பின்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையானது, நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் மாற்றப்பட்டது. இறுதியில் நகர அபிவிருத்தி அமைச்சானது, இந் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைபடுத்தும் அமைப்பாக மாறியது. | | |
| சுகிதபுரவர நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சு |
| | நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளானது இணையத் தளங்களில் ஒன்லைனில் கிடைக்கின்ற போதிலும், பல்வேறு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இணையத் தளத்தில் (ற்நடிஉாநஉமள) இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான தகவல்கள் எதுவும் வழங்கப்படவில்லை என தகவல்களைப் பெற்றுக் | நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடக் கூடிய வகையில் 2020 ஆம் ஆண்டில் எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், 13ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்ட 6 அரச நிறுவனங்களில் நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | கொள்வதற்கான உரிமையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் குறிப்பிடுகின்றது. மேலும் 2020 ஆம் ஆண்டில், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்ப வசதிகள் அமைச்சினால் 420 இலட்சம் இலங்கை ரூபா பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் செயல்த் திட்டதிற்கான வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் இதனைப் பற்றி ஒன்லைன் அறிக்கைகளில் எதுவும் குறிப்பிடப்படவில்லை | | குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 1 புள்ளியின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்டமொன்று, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |
| சஹசர பேரூந்து நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | போக்குவரத்து அமைச்சு |
| | 2016 ஆம் ஆண்டின், 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைக்கு இணங்க, அது ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதி அமைச்சிடம் இருந்தோ பின்னர் அதனை மாற்றிப் பதிவு செய்த போக்குவரத்து அமைச்சிடம் இருந்தோ தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இருப்பினும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்ப வசதிகள் அமைச்சின் மதிப்பீட்டின் கீழ், | ஒன்லைனில் கிடைக்கும் தகவல்களானது பிரித்தறியக் கூடியதாகக் காணப்படாமையினால் அத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த இலக்குகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து தெளிவாக மதிப்பிடுவது கடினமானது. ஒன்லைனில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விதத்திற்கு இணங்க மதிப்பீடொன்றைச் செய்வதற்கு மதிப்பீட்டாளர் தன்னளவில் கணிசமான அளவு அனுமானங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை தோன்றும். | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், 13ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்ட 6 அரச நிறுவனங்களில் போக்குவரத்து அமைச்சும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 1 புள்ளியின அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்டமொன்று, 2020 ஆம் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | இணையத் தளத்தின் ஒன்லைனில் முழு அண்டிற்குமான தகவல்கள் காணப்பாடவிடினும் கூட சில தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது | | ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |
| இலங்கை போக்குவரத்து சபைக்கு நவீன வசதிகளுடன் கூடிய பாவனையாளர் இயைபு நியமங்களுடைய 250 புதிய பேரூந்துகளை கொள்வனவு செய்தல் | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | இலங்கை போக்குவரத்து சபை (போக்குவரத்து அமைச்சு) |
| | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு ஜஜ (ன) இனை மேற்கோள் காட்டி தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இருப்பினும், 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், குறித்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை போக்குவரத்து சேவை முகாமைத்துவ அமைச்சு வழங்கியது. இருப்பினும் பேருந்துகளினை விலை கொடுத்து வாங்குவது தொடர்பான தகவல்கள் எதுவும் ஒன்லைனில் கிடைக்கவில்லை. | நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடக் கூடிய வகையில் 2020 ஆம் ஆண்டில் எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்ட 5 அரச நிறுவனங்களில் தேசிய இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 3 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்ட முன்மொழிவொன்று, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
| --- | --- | --- | --- |
| | | | உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |
| ரண் மாவத் கிராமிய வீதி பராமரிப்பு மற்றும் நிர்மாண நிகழ்ச்சித்திட்டம் | ஒத்துழைக்கப்பட்டது | கணிசமானளவு நிறைவேறியது | கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு |
| | 2016 ஆம் ஆண்டின், 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைக்கு இணங்க, தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையானது அமைச்சரவையில் இருந்து இராஜாங்க அமைச்சிற்கு மாற்றப்பட்டது. மேலும் ஒன்லைனில் இது தொடர்பான தகவல்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்திற்கு இணங்க பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களானது, ஆண்டுக்கான பௌதீக ரீதியான இலக்குகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை எனவும் கட்டணங்களைச் செலுத்துவதற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றது. 2019 ஆம் ஆண்டிற்கான, தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளமையால், இச் செயல்த் திட்ட முன் மொழிவானது தகவல்கள் எதுவும் வெளிப்படுத்தப்படாத செயல்த் திட்ட முன்மொழிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தகவல்களுக்கு இணங்க கட்டணங்களைச் செலுத்துவதற்கான நிதி பயன்படுத்தப்பட்டுள்ளமையால், பௌதீக ரீதியான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்ட 5 அரச நிறுவனங்களில் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 3 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்ட முன்மொழிவொன்று, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | எனவே, வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் நடைமுறைச் செலவினங்களின் அடிப்படையில், பார்க்கின்ற போது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. | கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |
| கிராமசக்தி" உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம | ஒத்துழைக்கப்பட்டது | கணிசமானளவு நிறைவேறியது | சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு |
| | 2016 ஆம் ஆண்டின், 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைக்கு இணங்க, தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திடம் இருந்து தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. இருப்பினும் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தை சமுர்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் பயன்படுத்தப்படாத அரச வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சே நடைமுறைப்படுத்தி வருவதாக பின்னர் நிதி அமைச்சு குறிப்பிட்டது. செயல்த்திட்ட முன் மொழிவில் 2020 ஆம் ஆண்டுக்காக | குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதீக இலக்குகளைப் பற்றியோ பௌதீக அபிவிருத்தியைப் பற்றியோ தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படவில்லை. அதற்குப் பதிலாக நிதி குறித்தான முன்னேற்ற அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டன. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டம் குறித்து தமது பதிலை வழங்கிய தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களமானது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதித் தொகை மற்றும் உண்மையான செலவினங்களானது, திணைக்களத்தில் கிடைக்ககக் கூடிய தகவல்களின் அடிப்படையில் அமைந்திருப்பதாகவும், இதனைத் தவிற மேலதிக தகவல்கள் தேவைப்படின் | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்ட 5 அரச நிறுவனங்களில் சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் பயன்படுத்தப்படாத அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 3 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விடயம் தொடர்பான தகவலும் ஒன்லைனில் வழங்கப்படவில்லை. | தற்போது இந் நிகழ்ச்சித் திட்டத்தைத நடைமுறைப்படுத்தி வரும், சமுர்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் பயன்படுத்தப்படாத அரச வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைக் கோரிக்கையினைத் தாக்கல் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமென் குறிப்பிடுகின்றது. மேலும் இச் செயல்த் திட்டமானது குறிப்பட்ட வருடத்திற்குள் நிறுவனங்களுக்க மாற்றப்பட்டிருப்பதாகவும் திணைக்களம் குறிப்பிடுகின்றது. | செயல்திட்ட முன்மொழிவொன்று, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |
| அனர்த்த முகாமை எதிர்பாரா செலவின நிதியத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடு | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | அனர்த்த முகாமைத்துவ நிலையம் |
| | தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு ஆரம்பத்தில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதன் பின்னர், தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சிற்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும் இப் பொறுப்பு தமக்கு மாற்றப்பட்டுள்ளதனைப் பற்றி அறிவிக்கும் கடிதங்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என இராஜாங்க அமைச்ச குறிப்பிட்டதனைத் தொடர்ந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைக் | தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்திற்கு இணங்க பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களானது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின், 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான முன்னேற்ற அறிக்கைச் சாராம்சம், அனர்த்தங்களின் விளைவாகத் தோன்றும் தாக்கங்களின் தீவிரத்தைக் குறைப்பது தொடர்பான ஆய்வுகள் மற்றும் வழிமுறைகளை விருத்தி செய்தல் குறித்தான 2020 ஆம் ஆண்டுக்கான செயன்முறைத் திட்டம், அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களைத் திட்டமிடும் பிரிவின், | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், 13ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்ட 6 அரச நிறுவனங்களில் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 1 புள்ளியின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த 2 செயல்திட்டங்கள், 2020 ஆம் ஆண்டில் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | கோரிக்கையானது நேரடியாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் மீள் தாக்கல் செய்யப்பட்டது. செயல்த்திட்ட முன் மொழிவில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விடயம் தொடர்பான தகவலும் ஒன்லைனில் வழங்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கான செயன்முறைத் திட்டம், பயிற்சி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தல் குறித்தான 2020 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட செயன்முறைத் திட்டம், மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான, 2020 ஆம் ஆண்டின் செயன்முறைத் திட்டம் என்பவற்றினை உள்ளடக்கி இருந்தது. எவ்வாறாயினும் இந்த ஆவணங்கள் எதிலுமே அனர்த்த முகாமைத்துவத்திற்கான எதிர்பாராச் செலவுகளுக்கான நிதியம் குறித்தான எவ்விதமான தகவல்களும் உள்ளடக்கப்படாமையினால் செயல்த் திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய முடியாது. | மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |
| தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டம் | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | அனர்த்த முகாமைத்துவ நிலையம் |
| | தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு ஆரம்பத்தில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதன் பின்னர், தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சிற்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும் இப் பொறுப்பு தமக்கு மாற்றப்பட்டுள்ளதனைப் பற்றி அறிவிக்கும் கடிதங்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என இராஜாங்க அமைச்ச குறிப்பிட்டதனைத் | தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்திற்கு இணங்க பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களானது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின், 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான முன்னேற்ற அறிக்கைச் சாராம்சம், அனர்த்தங்களின் விளைவாகத் தோன்றும் தாக்கங்களின் தீவிரத்தைக் குறைப்பது தொடர்பான ஆய்வுகள் மற்றும் வழிமுறைகளை விருத்தி செய்தல் குறித்தான 2020 ஆம் ஆண்டுக்கான செயன்முறைத் திட்டம், | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், 13ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்ட 6 அரச நிறுவனங்களில் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 1 புள்ளியின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | தொடர்ந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைக் கோரிக்கையானது நேரடியாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் மீள் தாக்கல் செய்யப்பட்டது. செயல்த்திட்ட முன் மொழிவில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விடயம் தொடர்பான தகவலும் ஒன்லைனில் வழங்கப்படவில்லை. | அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களைத் திட்டமிடும் பிரிவின், 2020 ஆம் ஆண்டுக்கான செயன்முறைத் திட்டம், பயிற்சி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தல் குறித்தான 2020 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட செயன்முறைத் திட்டம், மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான, 2020 ஆம் ஆண்டின் செயன்முறைத் திட்டம் என்பவற்றினை உள்ளடக்கி இருந்தது. எவ்வாறாயினும் இந்த ஆவணங்கள் எதிலுமே அனர்த்த முகாமைத்துவத்திற்கான எதிர்பாராச் செலவுகளுக்கான நிதியம் குறித்தான எவ்விதமான தகவல்களும் உள்ளடக்கப்படாமையினால் செயல்த் திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய முடியாது. | அதிகாரமுடையவர்களின் கீழிருந்த 2 செயல்திட்டங்கள், 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |
| அரசாங்க சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப் பாடநெறிகளை கற்பதற்காக மாணவர்களுக்கு வழங்கப்படும் 'வட்டியற்ற மாணவர் கடன்' திட்டத்தில் உள்வாங்கப்படுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் | ஒத்துழைக்கப்பட்டது | பகுதியளவு நிறைவேறியது | கல்வி அமைச்சு |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இல 12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க செயன்முறைத் திட்டங்களும், முன்னேற்ற அறிக்கைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் செயல் திட்ட முன் மொழிவில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விடயம் தொடர்பான தகவலும் ஒன்லைனில் வழங்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான செயன்முறைத் திட்டத்தில் 5000 மாணவர்கள்களை இலக்காகக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், முன்னேற்ற அறிக்கைக்கு இணங்க, 2020 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டின் நிறைவில் 2242 மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையாக முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2242 மாணவர்கள் என்னும் எண்ணிக்கைக்கும், மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக ஐகுளுடு நிறுவனத்தில் சுருக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்து கொள்ளப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 2569 என்னும் தரவுகளுக்கும் இடையில் சிறு வேறுபாடு காணப்படுகின்றது. கணிப்பீடுகளை மேற்கொள்வதற்காக முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளே எடுக்கப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், கல்வி அமைச்சானது நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 3 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்ட முன்மொழிவுகள் 2, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன |
| 2019 ஆம் ஆண்டின் தீர்ப்பனவு செய்யப்படாத பட்டியல்களை தீர்ப்பதற்கு ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ள | வெளிப்படையானது | பகுதியளவு நிறைவேறியது | தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம் (நிதி அமைச்சு) |
| | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கை ஊடாக | தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கை ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு இணங்க | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், நிதி அமைச்சு மூன்றாம் இடத்தில் உள்ள நிறுவனமாக தெரிவு |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களமும், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமும் இச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பானது தம்முடையதல்ல என அடிக்கடி ஒன்றை ஒன்று சாடிக்கொண்டு இருந்தமையினால், தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கையானது தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கும், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கும் இடையில் பல தடவைகள் மாற்றப்பட்டது. இறுதியில் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திடம் இருந்தே கோரிக்கைக்கான பதில் கிடைத்தது. அமைச்சரவைத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளுக்குச் சமமான செலுத்தப்பாத கட்டணங்கள் தொடர்பான தகவல்களானது நிதி அமைச்சினது, ஒன்லைனில் காணப்படுகின்ற 2019 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் காணப்படுகின்றது. நிகழ்ச்சித் திட்ட முன் மொழிவு தொடர்பான தகவல்களானது, நிதி அமைச்சினது, ஒன்லைனில் காணப்படுகின்ற 2019 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையிலும், 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. | சட்ட வரைஞரினால் உறுதித் தீர்மானம் ஒன்று வரையப்பட்டதோடு, 2019 ஆம் ஆண்டின் இச் செலுத்தப்படாத கட்டணங்களைச் செலுத்துமாறு சட்டமா அதிபரினால் அனுமதி வழங்கப்பட்டது. இவ்வுறுதித் தீர்மானமானது, வாபஸ் பெறப்பட்டதோடு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், வாக்களிப்பு நிலைக்கு முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. எனவே மேற் குறிப்பிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளைத் திறைசேரி முன்னெடுக்கவில்லை. எவ்வாறாயினும் ஒன்லைனில் காணப்படுகின்ற தகவல்களுக்கு இணங்க 242.7 பில்லியன் இலங்கை ரூபா செலுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. எனவே முன்னேற்றமானது பக்கச் சார்பானது என வகைப்படுத்தப்படுகின்றது.<br>ஆனால் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதுடன் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டாலும் அது வாக்களிப்பு நிலைக்கு செல்லவில்லை. எனவே, அமைச்சரவை முடிவை செயல்படுத்த திறைசேரி தொடர்ந்து செயற்படவில்லை இருப்பினும், நிகழ்நிலையில் கிடைக்கும் தகவல்களுக்கு அமைய எல்.கே.ஆர் 242.7 பில்லியன் வழங்கப்பட்டு இருந்தது இதனால் முன்னேற்றம் பகுதியளவிலானது என வகைப்படுத்தப்பட்டுள்ளது. | செய்யப்பட்டது. வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 3.40 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த 5 செயல்திட்ட முன்மொழிவுகள், 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. தீர்மானிக்கப்பட்டது (திறந்தவெளியுடன் இணைக்கப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் எளிய சராசரி). இந்த மதிப்பெண் 2020 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 5 திட்டங்கள் குறித்த தகவல்களை வெளியிட்டதன் அடிப்படையில் அமைந்தது, அவை அதிகாரத்தின் கீழ் இருந்தன. |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| | | | |
| பண்டாரநாயக்க சருவதேச விமான நிலைய அபிவிருத்தி கருத்திட்டம் - கட்டம் II படிநிலை 2 பொதி அ | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | (இலங்கை) வரையறுக்கப்பட்டவிமான நிலையம் மற்றும் விமான சேவைகள் |
| | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க எவ்விதமான தகல்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. வழயைறுக்கப்பட்ட இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் இணையத் தளத்தில் 3 மாதங்களுக்கான நிகழ்ச்சித் திட்டமும் செயல்த் திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பான விபரங்கயைப் பற்றியும் குறிப்புக்கள் காணப்பட்ட போதிலும் நடைமுறைத் திட்டங்கள் தொடர்பான விடயங்கள் எதுவும் காணப்படவில்லை. தனித்துவமான தொடர்பு விளக்க வரைபடமானது (நுவெவைல சுநடயவழைளொனி னுயைபசயஅ – நுசுனு) வுநுஊ மதிப்பு மற்றும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள செயல் திட்டங்களின் கீழான கடன் மதிப்பு என்பவற்றுடன் இச் செயல் திட்டத்தை ஒரு சுருக்கமான விளக்கத்துடன் பட்டியலிடுகிறது. | செயல் திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்குப் போதியளவு தகவல்கள் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் ஒன்லைனில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்களுக்கு இணங்க, இச் செயல் திட்டம் உண்மையிலேயே 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், 13ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்ட 6 அரச நிறுவனங்களில் வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனமும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 1 புள்ளியின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்டமொன்று, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| 'கமட்ட கெயக் - ரட்டட்ட ஹெட்டக்' - ஒவ்வொரு குடும்பத்திற்கும் வசதியான வீடொன்று | வெளிப்படையானது | பகுதியளவு நிறைவேறியது | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிட பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு |
| | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க எவ்விதமான தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தகவல்களை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தவர் தனியார் நிறுவனமொன்றாகக் காணப்பட்டமையினால், தகவல் வழங்கும் அதிகாரம் படைத்தவர்கள் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் பகுதி 1 பிரிவு 3 (1) இனை மேற்கோள்காட்டி தகவல்கள் வழங்குவதனை நிராகரித்தது. செயல்த் திட்ட முன்மொழிவில் காணப்படுகின்ற தகவல்களானது, 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி இடப்பட்ட பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கையில் காணப்படுகின்றது. | பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர், 11,317 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 5,000 வீடுகள் பொதுமக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட 6 நிறுவனங்களில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 4 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்ட முன்மொழிவொன்று, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| 150,000 வீடுகளுக்கான குடிநீர் இணைப்புகளை வழங்குதல் | ஒத்துழைக்கப்பட்டது | முன்னேற்றம் அற்றது | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு அமைச்சு |
| | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், செயன்முறைத் திட்டங்களையும், முன்னேற்ற அறிக்கைகளையும் வழங்கினர். ஆரம்ப கட்ட நிதி ஒதுக்கீடு போன்ற செயல் திட்ட முன் மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான தகவல்கள் ஒன்லைனில் காணப்பட்ட போதிலும், செயல் திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு அவை போதுமானதாக இல்லை. | செயல் திட்ட முன்னேற்ற அறிக்கையில் இலக்கு வைக்கப்பட்ட 150,000 இணைப்புகளில் முதல் 2 காலாண்டு காலப்பகுதிக்குள் 42,770 இணைப்புகள் வழங்கப்பட்டதாக முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது. கோவிட் 19 இன் விளைவாக செயல் திட்டத்தின் முன்னேற்றமானது பாதகமான முறையில் பாதிப்பிற்கு உட்பட்டிருப்பதாக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கான பதிலளிப்புக்களில் குறிப்பிடப்படுகின்றது. | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்ட 5 அரச நிறுவனங்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகபலமைப்பு சபையும் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 3 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்ட முன்மொழிவொன்று, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன. |
| பல்கலைக்கழக அனுமதியினை பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் "மஹபொல புலமைப்பரிசில்" தவணைத் | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | வர்த்தக அமைச்சு |
| | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் | இம் முடிவின் முன்னேற்றத்தை தீர்மானிப்பதற்குப் போதியளவு தகவல்கள் கிடைக்கவில்லை. இலக்க | 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 24 அரச நிறுவனங்களில், கல்வி அமைச்சானது நான்காம் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| தொகையை அதிகரித்தலும் இந்த புலமைப்பரிசில் வாய்ப்புகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்துதலும் | கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க எவ்விதமான தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கையானது வர்த்தக அமைச்சுக்கு மாற்றம் செய்யப்பட்ட போதிலும் எவ்விதமான மறுமொழியும் கிடைக்கவில்லை. மகாபொல புலமைப் பரிசில் திட்டத்தின் செலவுகள் குறித்தான தகவல்கள் ஒன்லைனில் காணப்பட்ட போதிலும் அவை அமைச்சரவையின் இத் தீர்மானத்துடன் நேரடியாகத் தொடர்புடையவை அல்ல. | தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க எவ்விதமான தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. 2020 – 2021 ஆம் ஆண்டுக்கான நிதி முகாமைத்துவ அறிக்கையானது (பிஸ்கால் அறிக்கை), ஜனவரி மாதத்தில் இருந்து ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதிக்கான மகாபொல புலமைப் பரிசில் திட்டத்தின் செலவுகள் குறித்தான தகவல்களைக் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் அனுமான அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின் ஆனால் குறிப்பிட்ட அளவு அனுமானத்தைப் பயன்படுத்தாமல் இந்த தகவலை முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்த முடியாது. | இடத்தைப் பெற்றுக் கொண்டது. வெளிப்படைத் தன்மையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் சராசரியைக் குறித்து நிற்கும் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் அமைச்சினால் பெறப்பட்ட எளிய சராசரி புள்ளிகளான 3 புள்ளிகளின் அடிப்படையிலேயே இத் தரவரிசை தீர்மானிக்கப்பட்டது. அதிகாரமுடையவர்களின் கீழிருந்த செயல்திட்ட முன்மொழிவுகள் 2, 2020 ஆம் ஆண்டில் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது அது தொடர்பான தகவல்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக வழங்கியமையை அடிப்படையாகக் கொண்டே எளிய சராசரிப் புள்ளிகள் வழங்கப்பட்டன |
| பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் முனைவிடத்திற்கான விசேட நுழைவுப்பாதை | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | சற்றுலாத்துறை அமைச்சு |
